# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :27 July 2025*
கோட்டை:7 வாயில்:27 ஜூலை 2025

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

# Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


குறுந்தொகைப் பாடல்களில் உளவியல் பகுப்பாய்வு அணுகுமுறை
முனைவர் இரா.ஜெய்சங்கர்

புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் ஆளுமைத்திறன்
முனைவர் அ.சேமலா வசந்தா

ஐங்குறுநூற்றில் பாணர்
தே. சுதா

தொல்காப்பியம் காட்டும் நிறக்கோட்பாடுகள்
க.சுவாதி

சங்க இலக்கியங்கள் சுட்டும் களவு கோட்பாடுகள்
ஏ. தீபா

சிலம்பில் இயற்கை
க. மங்கையர்க்கரசி

மணிமேகலையில் மனிதநேயம்
பெ. ஜோதி,

இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு
முனைவர் ஏ.சித்ரா

பண்டைய தமிழர்களின் மணமுறைச் சடங்குகள்
முனைவர் கி.சரண்யா

ஆற்றுப்படைகலைஞர்களின் அறம்
கு. சிந்து

பண்டைகாலத்து தமிழக மக்களின் வாழ்க்கைமுறை
ம. துர்க்காதேவி

ஒரு சொல் பல பொருள் - வேர்ச்சொல் வழி விளக்கம் அறிதல்
முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை

வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறம்
முனைவர். நா. ஹேமமாலதி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**தமிழர் நிலத்தில் பாலையும் ஒட்டகமும்**
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

**தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள்**
முனைவர்.அ.ரேவதி

**தமிழர் மரபும் வாழ்வியலும்**
பொ. அகத்திய பாலா

**தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள்**
முனைவர் வ.மோகனப்பிரியா

**பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் சிலேடையணி**
வே.வெ.சுஜாதா

**கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்படும் விதம்**
மேபல் சுபிதா த.

**பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர்தம் நாட்டியக் கலைப்பணியும்**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**உலாப்பிரபந்தங்களில் நாட்டியசாஸ்திரம் கூறும் அஷ்டவித நாயகிகளின் வகிபங்கு**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**நாட்டுப்புற வழக்காறுகள் நோக்கில் கானகன் நாவல்**
ர.விண்ணிலவு1, முனைவர் அ. மரிய செபஸ்தியான்2

**சங்கக் கால திணை பதிவுகளின் இடையர் இன மக்களின் சமூக வாழ்க்கையும் கீதாரி நாவலில் இடையர் வாழ்வியல்**
ஓர் ஒப்பாய்வு- சே.நிர்மலா1, முனைவர் அ.மரிய செபஸ்தியான்2

**வேள்பாரி புதினத்துள் அகநானூற்று காட்சிகள்**
ர.கிருஷ்ணவேணி



**அட்டைப்படம் உதவி**
இணையம்
நன்றி

# அகத்தினுள்


சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்கமும், பின்காலனியப் பெண்ணியமும்
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

கவிஞர் எழிலவனின் 'மரவாடியில் ஒரு போதிமரத்தில்' படைப்பாக்க உத்திகள்
சி.ஆர்த்தி

தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலை
பி.தீபாவதி

கீரனூர் ஜாகிர் ராஜா புதினங்களில் இஸ்லாமியர் பண்பாடு
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

உரிப்பொருள் உணர்த்தும் கவிஞர் சுகிர்தராணி கவிதைகள்
ந.ஸ்டாலின்

தமிழ்த் திரை இசைப் பாடல்கள்
கார்த்திக் க

நிர்வாணமுக்தி சிறுகதை - பெண்மைய விமர்சனம்
ஜென்சி வை கி

இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள்
சே. வனிதா

Historical And Archaeological Impact Of Palayarai
Dr.S.Neelavathy

Chola's Temples As A Social Organization
A Study - S. Mala

A Statue Of Prakara At The Kumbakonam Nageswara Temple
M. Amirthavalli



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# தமிழ்

# பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர்தம் நாட்டியக் கலைப்பணியும்

## *Bhandhanai Nallur Meenakshi Sundarampillai and her Dance Art*

***Dr. Thushyanthy Juliyan Jeyapragash,*** *Senior Lecturer in Dance, Drama & Theater Arts, Swami Vipulananda Institute of Aesthetic Studies , Eastern University, Sri Lanka*

***Abstact***

*The reason why Bharatham, the world s greatest dance art, has survived in this world is due to the Nattuvanars who have come down the line and the dancers they have Created. This art, Which is spread not only throughout Tamil Nadu but also all over the world, is given in Tamil Nadu by the names of the Nattuvanars and the names of the towns Where they lived. Among them, Natya Kalanithi Meenakshi Sundarampillai has a special place for herself. This research article aims to examine the work she has done for the development of the art of dance and to share her role models with the emerging dancers.*

***Keywords*** — *Bharatham, Nattuvanar, Korvai, Jadhi, Paani ( style)*

**கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்,** சிரேஷ்ட விரிவுரையாளர் (நடனத்துறை) சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**ஆய்வுச் சுருக்கம்**

உலகின் தலைசிறந்த ஆடற்கலையாக உள்ள பரதக்கலை இவ்வுலகில் நீடித்து நிலைத்து நிற்கக் காரணம் வழிவழியாக வந்த நட்டுவனார்களையும் அவர்களால் உருவாக்கப்பெற்ற நடனக் கலைஞர்களையுமே சாரும். தமிழகம் முழுவதும் மட்டுமல்லாது உலகெங்கும் பரவி இருக்கின்ற இக்கலை தமிழகத்தில் நட்டுவனார்கள் பெயர்களாலும் அவர்கள் வாழ்ந்து வந்த ஊரின் பெயராலும் வழங்கப்படுகிறது. இவர்களில் தனக்கென ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றவர் நாட்டிய கலாநிதி மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள். இவர் நாட்டியக் கலை வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை ஆராய்வதும் இவரது முன்மாதிரிகளை வளர்ந்துவரும் நாட்டியக் கலைஞர்களுக்கு எடுத்துக் கூறுவதனையும் இவ் ஆய்வுக் கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**திறவுச்** சொற்கள் - பரதம், நட்டுவனார், கோர்வை, ஜதி, **பாணி**

**முன்னுரை**

பழமையும் தொன்மையும் தெய்வாம்சமும் கொண்ட கலை நம் பரதக்கலை. இன்று நம்மிடையே உள்ள இந்நாட்டியக்கலை பல்வேறு அரும்பெரும் தகவல்களையும் வரலாற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது. உலகின் தலைசிறந்த ஆடற்கலையாக உள்ள இப்பரதக்கலை இவ்வுலகில் நீடித்து நிலைத்து நிற்கக் காரணம் வழிவழியாக வந்த நட்டுவனார்களையும் அவர்களால் உருவாக்கப்பெற்ற நடனக் கலைஞர்களையுமே சாரும். அவ்வகையில் தஞ்சை நால்வர்களும் அவர்கள் வழிவந்த வம்சாவழியினரும் முதன்மையானவர்களாகத் திகழ்கின்றனர்.

தமிழகம் முழுவதும் மட்டுமல்லாது உலகெங்கும் பரவி இருக்கின்ற இக்கலை தமிழகத்தில் நட்டுவனார்கள் பெயர்களாலும் அவர்கள் வாழ்ந்து வந்த ஊரின் பெயராலும் வழங்கப்படுகிறது. தஞ்சை நால்வர், பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, காட்டுமன்னார்கோயில் முத்துக்குமாரப்பிள்ளை, காஞ்சிபுரம் கந்தப்ப நட்டுவனார், வழுவூர் இராமையாப்பிள்ளை என்று

ஊர்களின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுகின்றனர். இவர்களில் தனக்கென ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றவர் நாட்டிய கலாநிதி மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள். இவர் நாட்டியக் கலை வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை ஆராய்வதும் இவரது முன்மாதிரிகளை வளர்ந்துவரும் நாட்டியக் கலைஞர்களுக்கு எடுத்துக் கூறுவதனையும் இவ் ஆய்வுக் கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**மீனாட்சி சுந்தரம்பிள்ளை**

சூரியமூர்த்தி நட்டுவனாருக்கும் குட்டியம்மாளுக்கும் மகனாக 22.09.1869 புரட்டாசி எட்டாம் நாள் பந்தனைநல்லூரில் பிறந்தவர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள். பெருமைமிக்க தஞ்சை நால்வர் வழியில் வந்த மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் தாய் வழியிலும் தந்தை வழியிலும் பல்வேறு கலைத் திறமைகளைக் கொண்ட திறன் காரணமாக தானும் அக்கலைத் துறையில் மிகுந்து பரிணமித்தார். தனது தந்தையிடமே வாய்ப்பாட்டு மற்றும் வயலின் என்பவற்றைக் கற்றுக் கொண்டார். குமாரஸ்வாமி நட்டுவனாரிடம் நாட்டியமும் நட்டுவாங்கத்தையும் முறைப்படி பயின்றார். மஹாதேவ நட்டுவனாரிடம் பரதக்கலையிலும் நட்டுவாங்கத்திலும் மேற்பயிற்சி பெற்றார். இசை மற்றும் நாட்டியம் மட்டுமல்லாது பல்வேறு மொழிகளிலும் மிகுந்த புலமை கொண்டவராக விளங்கினார். மொழி அறிவிலும் இசை அறிவிலும் நாட்டிய அறிவிலும் மிகுந்த பயிற்சியும் புலமையும் பெற்ற மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் ஒரு முழுமை பெற்ற பூரணத்துவமான நட்டுவனாராகத் திகழ்ந்தார். தஞ்சை நால்வரில் சிவானந்தம் அவர்களின் மகன் மகாதேவன் அவர்களுடைய மகள் கல்யாண சுந்தரத்தம்மாளை மீனாட்சிசுந்தரம்பிள்ளை மணந்தார். இவர்களுக்கு ஐந்து பெண் பிள்ளைகள். இவர்கள் ஐவரும் பிரபல நட்டுவனார்களையே மணம்புரிந்தார்கள். மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் தனது முதல் குருவான குமாரஸ்வாமி நட்டுவனாரின் சின்னமேளத்தில் உதவி நட்டுவனாராகத் தன் கலைப் பணியைத் தொடங்கினார்.

**மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் நாட்டியப் பயிற்சியளித்த விதம்**

மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் காலையில் அடவுப் பாடங்களையும் மாலையில் அபிநயப் பகுதிகளையும் சொல்லிக் கொடுப்பாராம். அடவு முறைகள் அரைமண்டியில் அங்க சுத்தத்துடன் பயிற்சி கொடுப்பாராம். மிகப் பொருத்தமான அடவுகளைக் கொண்டு தீர்மானங்களை உருவாக்குவதில் நிகரற்றவர். நிருத்தத்தில் இவரது விறுவிறுப்பான அடவுக் கோர்வைகள், ஜதிகள் என்பன நுணுக்கமான லய வேலைப்பாடுகளுடன் கூடியவை. நடன வடிவமைப்பு என்பது இவரின் சிறந்த திறமையாகும். அபிநயம் நாட்டியதர்மியாகவே அமைந்து காணப்படும்.

**நாட்டிய உருப்படிகளைக் கையாண்ட விதம்**

நாட்டியத்திற்குத் தேவையான நடன உருப்படிகளான ஜதீஸ்வரம், வர்ணம், கீர்த்தனை, தில்லானா போன்ற பல்வேறு உருப்படிகளை இயற்றி அவற்றிற்கு நடன வடிவமும் கொடுத்துள்ளார். கடினமான அடவுகளை எளிய முறையில் ஆடும் வண்ணம் நேர்த்தியாக நடன வடிவம் தருவாராம். பதம் பாடுவதிலும் அதற்கேற்ற அபிநயங்களைச் சொல்லித் தருவதிலும் நிகரற்றவர். பரதநாட்டிய மரபிலே முதன் முதலாகக் கீர்த்தனைக்கு நடனம் அமைத்தவர் இவரே. தியாகராஜ சுவாமிகளின் பஞ்சரத்ன கீர்த்தனைகளுக்கும் நடனம் அமைத்தார்.

**2 பந்தணைநல்லூர் பாணி**

பந்தணைநல்லூர் என்றாலே அதன் அடவு சுத்தம் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. அங்கசுத்தம், அடவு, கோர்வைகள், சொற்கட்டுகளின் உச்சரிப்பு, நட்டுவாங்க முறை போன்ற பல அம்சங்கள் பரதநாட்டிய உலகில் பந்தணைநல்லூர் பாணிக்கு தனி சிறப்பைத் தேடித்தந்தது எனலாம்.

பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் பாணியே பழமையானது என்பார்கள். இவரது பாணி எளிமையும், அழகிய சிற்ப நிலைகள் போன்ற கரணங்களை அடிப்படையாகக் கொண்டதும், சௌக்க காலத்தில் மிக அழகாக நாயக நாயகி பாவங்களை அபிநயிக்கும் வகையிலும் அமைந்துள்ளது. நாட்டியக் கலை நுட்பங்களையும், நாட்டிய இசை வடிவங்களையும் சிறப்பாகக் கற்பித்து நாட்டியக் கலையையும் அதன் இசை மரபையும் கையாண்ட பெருமை இவருக்கு உண்டு. இத்தகைய சிறப்புகளால் பந்தணைநல்லூர் பாணி சிறப்படைகிறது. பந்தணைநல்லூர் வழியில் பழமை மாறாத சம்பிரதாய அமைப்பில் நாட்டியத்திற்கு என்று வகுக்கப்பட்ட அடவு பாட முறைகளின் படி பயிற்றுவிக்கப்படுகிறது. மேற்கண்ட செய்திகளைக் கொண்டு பார்க்கையில் பந்தணைநல்லூர் பாணி சற்று வேறுபட்டு காணப்பட்டாலும், மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் கற்பித்த முறையில் இந்த பாணி சிறப்பாகப் பேசப்படுகிறது.

**அடவு முறைகள்**

“அடவு” என்பது ஆடலின் ஒரு ஆதாரப் பகுதியைக் குறிக்கும். இது நடனத்தின் ஒர் அளவை என்றே கூறலாம். பொதுவாக பரம்பரையாக வந்த நட்டுவனார்களையும் மரபு சாரா கலைஞர்களையும் பின்பற்றி அவர்களின் வழிவந்த நாட்டிய ஆசான்கள் இன்றும் தங்கள் குருவின் ஆடல் அமைப்பு மற்றும் அடவு முறைகளை தொடர்ந்து கையாண்டு வருகின்றனர். அவ்வகையில் பழமையான பாரம்பரியத்தைக் கொண்ட தஞ்சாவூர், பந்தணைநல்லூர், வழுவூர் என்ற மூன்று ஊர்களில் வழிவந்த நட்டுவனார்களின் நடனப் பாரம்பரியம் மிகப் பழமையானது. அத்தகைய பழமையான நடனப் பாரம்பரியத்தைக் கொண்ட பந்தணைநல்லூர் நாட்டியவழியில் பின்பற்றக்கூடிய அடவுகளில் சிலவற்றை மட்டும் எப்படி கையாண்டு ஆடி வருகின்றனர் என்பதைக் காணலாம்.

**தட்டிக்கும்பிடுதல் -** பூமாதேவியிடம் மன்னிப்பு கேட்டு கடவுள், குரு, சபையோர் ஆகிய மூவருக்கும் வந்தனம் தெரிவிக்கும் விதமாக நாட்டியம் பயில்வோர் முதலில் ஆடுவது. பந்தணைநல்லூர் வழியில் சமநிலையில் நின்று கடகாமுக முத்திரை லட்சணத்துடன் வலது, இடது கால் தட்டி அலபத்மமாக தலைக்கு மேலாகச் சுற்றி பூமியை தொட்டு வணங்கி பின் தட்டுக் கழியை தொட்டு வணங்குகின்றனர்.

**தட்டடவுகள் -** நாட்டியப் பயிற்சிக்கு அடிப்படை அடவுகளாக அமைவது தட்டடவுகள் ஆகும். பொதுவாக அரைமண்டியில் அமர்ந்து கைகளை இடுப்பில் வைத்தோ அல்லது தோள்பட்டைக்கு நேராக பக்கவாட்டிலோ நீட்டி கால்களை நன்றாக தட்டி ஆடப்படுவது தட்டடவு ஆகும். பந்தணைநல்லூர் வழியில் கைகள் இரண்டும் பக்கவாட்டில் நீட்டி பதாகக் கையின் விரல் நுணிகள் ஆகாயம் நோக்கி உயர்ந்த வண்ணம் நிறுத்தி அரைமண்டியில் அமர்ந்து பாதங்கள் நன்கு தரையில் படிய வைத்து தட்டும் வகையாக பயிற்சி அளிக்கப்படும். தட்டடவு வகைகளில் ஆறு வகை வரை தட்டி ஆடப்படும் வகையில் பயிற்சியளிக்கப்படும்.

**நாட்டடவுகள் -** தட்டடவிற்கு அடுத்ததாக பெரும்பாலான நட்டுவனார்களால் பயிற்றுவிக்கப்படும் அடவு நாட்டடவு எனலாம். அரைமண்டியில் பாதத்தை நாட்டியும் (அஞ்சிதம்) தட்டியும் ஆடப்படும் அடவு நாட்டடவு. பந்தணை நல்லூர் வழியில், இவ்வகையில் ஆறு முதல் எட்டு வகைகள் வரை நாட்டடவு பயிற்றுவிக்கப்படும்.

**குத்தடவு -** கால்களை அரைமண்டியில் தட்டிக் குதித்து கால்களின் முன்பாதத்தால் குத்தித் தட்டுவது குத்தடைவு எனப்படுகிறது. “தத் தை தா ஹா தித் தை தா ஹா” என்ற சொல்லுக்கு ஏற்ப பயிற்றுவிக்கப்படும். பத்தணைநல்லூர் வழியில் “தத் தை தா” என்ற சொல்லிற்கு கால்களை

தட்டிக் குதித்து, கைகளில் திரிபதாக ஹஸ்தம் பிடித்து பக்கவாட்டில் நீட்டி "ஹா" என்ற சொல்லுக்கு வலது இடது கைகளை திருப்புகின்ற முறையில் ஆடுவார்கள்.

**தட்டி மெட்டடவு -** பரத நாட்டிய உருப்படிகளில் நிருத்தியத்தில் அபிநயம் செய்யும் பொழுது இவ்வகை அடவுகள் பயன்படும். குறிப்பாக வர்ணம் ஆடும் பொழுது பாடல்களின் பொருளுக்கு ஏற்றவாறு கைகளில் அபிநயத்தையும், முகத்திலே பாவத்தையும், கால்களில் சதுஸ்ர கதியிலோ, திஸ்ரகதியிலோ ஆடும் பொழுது மேடையில் காண்கையில் அழகாக இருக்கும். பந்தணைநல்லூர் முறையில் கால்களை பார்ச்சுவமாக வைத்து ஆடப்படுகிறது. அதுபோல் தட்டி மெட்டு அடவு ஆடிக்கொண்டே நகர்ந்து ஆடப்படுமாம். மேலும் திஸ்ரம் (தகிட) ஆடும் பொழுது சிறிது துள்ளிக் குதித்து ஆடப்படும்.

**கோர்வை அடவு -** பல வகையான பாத அசைவுகளை சேர்த்து செய்வதே கோர்வை அடவாகும். பொதுவாக இவ்வகை அடவுகள் ஜதீஸ்வரம், வர்ணம், தில்லானா போன்ற நடன உருப்படிகளின் நிருத்தப் பகுதியில் அடிக்கடி கையாளப்படும். இவ்வகை அடவுகளில் பந்தணைநல்லூர் முறையில் கால்களை உபயோகிக்கும் முறை சற்று மாறுபடுகிறது. சிகர ஹஸ்தம் பிடித்து அரைமண்டியில் முறையே வலது, இடது கால்களை தட்டி பிறகு வலது காலை பக்கவாட்டில் நாட்டி, மீண்டும் அரைமண்டியில் தட்டி வலப்பக்கம் இடப்பக்கம் என நகர்ந்து ஆடப்படுகிறது, அவ்வாறு ஆடுகையில் கைகளில் கடகாமுகம் அலபத்மம் ஹஸ்தம் பிடித்து வலக்காலை பக்கவாட்டில் நாட்டி இடக்காலை ஸ்வஸ்திகமாக குத்தி வைத்து பிறகு ஒரு சேர வலப்பக்கம் குதிக்கின்றனர்.

**சறுக்கலடவு -** கால்கள் இரண்டும் சமநிலையில் வைத்து வலப்பக்கம் கால்களை சறுக்கி நகர்த்தி பின் கால்களை உயர்த்தி இறுதியில் பாதத்தின் முன் படத்தால் தட்டுவதாகும். இவ்வகை அடவுகளில் சிலர் இரு கால்களையும் முன்படத்தால் தட்டி ஆடுவர். ஆனால் பந்தணைநல்லூர் நாட்டிய முறையில் வலது பக்கம் நகரும் பொழுது வலக்காலும் இடது பக்கம் நகரும் பொழுது இடதுகாலும் என ஒரு பாதத்தை மட்டும் தட்டுகின்றனர்.

**மகுட அடவு -** தீர்மான அடவு என்றும் அழைக்கப்படகூடிய இத்தகைய அடவுகள் ஒரு கோர்வையின் இறுதியிலோ ஜதியின் முடிவிலோ ஆடப்படும். திதிதை, ததிங்கிணதொம், கிடதக தரிகிடதொம் என்ற சொல்லை பயன்படுத்தி ஆடப்படும். பந்தணைநல்லூர் வழியில் இந்த அடவு ஆடப்படும் முறை பழமையானது. இதனை தற்காலத்தில் பெரும்பாலான நடன ஆசிரியர்கள் பின்பற்றுவதில்லை எனலாம். காரணம் இவ்வகை அடவு நின்ற இடத்திலேயே அரைமண்டியில் கால்கள் பக்கவாட்டில் நீட்டப்பெற்று ஆடப்படுகிறது.

பந்தணைநல்லூர் அடைவுகள் அதன் பழமை மாறாமலும் ஓர் அடவிற்கு அடுத்த படியாக வருகின்ற அடவின் அழகும் இதன் சிறப்பம்சங்களாகும். இந்த முறையில் தட்டுதல், நாட்டுதல், நகர்தல், பாய்தல், குதித்தல், சறுக்குதல், சுற்றுதல் என்ற உடல் அசைவு நிலைகளிலும், முத்திரைகளின் பயன்பாட்டிலும், மூன்று கால அடைவுப் பயிற்சி என்ற முறையில் பந்தணைநல்லூர் நாட்டிய வழியில் பின்பற்றக் கூடிய அடவு முறைகள் சிறப்பாக கையாளப்படுகின்றது.

**நடன உருப்படிகள்**

கட்டிடங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு விதமான உருவம் இருப்பதுபோல நடன உருப்படிகளின் அமைப்பிற்கும் உருவ லக்ஷணங்கள் உண்டு. இவ்வரிசையில் பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் நடன உருப்படிகளை கையாண்ட விதமும் மேடைகளில் ஆடிய விதமும் பற்றி காணலாம். நாட்டிய நிகழ்ச்சிகளில் முதலாவதாக பந்தணைநல்லூர் வழியில் மங்களப் பாடல் பாடப்படுமாம். "ஜய ஜானகிரமணா, ஜய சுத்த புரி வாசா" போன்ற

தோடயமங்களப் பாடல்களைக் கொண்டும் நிகழ்ச்சியை தொடங்குகின்றனர். மங்கள சொற்கள் இடம்பெறக் கூடிய இந்த உருப்படி நிகழ்ச்சியின் தொடக்கத்திற்கு முன்பு கையாளப்படுகிறது. ஆனால் தற்காலத்தில் இது மேடைகளில் நடனவடிவம் பெற்று ஆடப்படுகிறது என்பதைக் காணமுடிகிறது.

**அலாரிப்பு**

பந்தணைநல்லூர் நாட்டிய வழியில் இறைவணக்கப் பாடலுக்குப் பிறகு அலாரிப்பு ஆடப்படுகிறது. மாறாக புஷ்பாஞ்சலி ஆடப்படுவதில்லை. அதுபோல கௌத்துவங்களை மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் கையாளவில்லை .பாரம்பரிய முறையில் அலாரிப்பு எவ்வாறு ஆடப்பட்டு வந்ததோ அதுபோலவே பிள்ளையும் கையாண்டு வந்துள்ளார். விளம்ப, மத்திம, துரித கால நடைகளை கொண்டே ஆடுகின்றனர்.

**ஜதீஸ்வரம்**

ஸ்வரங்களுக்கு ஏற்ப ஆடக்கூடிய இந்த நடன உருப்படியில் முதல் ஸ்வரம், இரண்டாம் ஸ்வரம், மூன்றாம் ஸ்வரங்களில் பொருத்தமான ஜதிக் கோர்வைகளைக் கொண்டு அமைக்கப்படும்.

**சப்தம்**

சப்தங்கள் பொதுவாக மிஸ்ர நடையிலும், இராகமாலிகை அல்லது காம்போதி இராகத்திலும் மட்டுமே ஆடப்பெறுகின்றது. அபிநயத்திற்கு முக்கியத்துவம் அளிக்ககூடிய இந்த உருப்படியை பந்தணைநல்லூர் வழியில் “சரசிஜாசலு” என்ற சப்தத்தில் கோபியர்கள் குளிப்பது போல் கிருஷ்ணன் கோபியர்களின் ஆடைகளை களவாடுவதும், கோபியர்கள் ஆடைகளை கேட்டு கெஞ்சுவதும், பால் கறப்பது, தயிர் கடைவது போன்ற விஸ்தரிப்பு மிக்க வகையில் சஞ்சாரிபாவம் கொண்டு ஆடப்பெறுகின்றது.

**வர்ணம்**

நாட்டியத்தில் உள்ள அனைத்து அம்சங்களையும் ஒரு சேரக்காணக் கூடிய வகையில் அமைக்கப்பட்டது பதவர்ணம் ஆகும். ஸ்வரம், ஜதி, சாகித்யம், அபிநயம், அடவுக்கோர்வைகள் என பல வண்ண மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையின் அழகைப் போன்றது வர்ணம் எனும் இந்த நடன உருப்படி. பந்தணைநல்லூர் வழியில் ராஜாக்கள் பெயரில் பல வர்ணங்கள் ஆடப்பட்டுள்ளன.

**கீர்த்தனை**

பந்தணைநல்லூர் வழியில் கீர்த்தனைகள் பிரதானமாகக் கையாளப்படுகின்றன. பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற முழுப்பகுதிகளும் பக்தி பூர்வம் கொண்டதாகவும், உருவ அமைப்பும் அவர் மீது கொண்ட பித்தும் வழிபாட்டுமுறைகளும் இறைவனை நிந்தித்து அருள்பெறுதல் போன்ற அமைப்புகளையும் கொண்டதாக இங்கு கீர்த்தனைகள் அமைகின்றன. மேலும் பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை தன் தந்தை கீர்த்தனைக்கு இசைவடிவம் கொடுத்தது போல் நாட்டியத்தில் உள்ள கீர்த்தனைக்கு முதன் முதலாக நடன வடிவம் கொடுத்தாக கூறப்படுகிறது.

**பதம்**

பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர் தனது நாட்டிய நிகழ்ச்சிகளில் தமிழ் மற்றும் தெலுங்கு பதங்களை கையாண்டுள்ளார். பந்தணைநல்லூர் வழியில் பல பதங்கள் மன்னர்கள், ஜமீன்தார்கள் பெயரில் இயற்றி ஆடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

**தில்லானா**

பந்தணைநல்லூர் வழியில் தில்லானாவில் கையாளப்படும் மெய்யடவுகள் முக்கால நடையுடன் அதன் பிரயோக அமைப்பு நிதானமாகத் தட்டுதல், குதித்தல் போன்ற நிலைகளைக் கொண்டு உசி தட்டியும் ஆடப்பெறுகின்றது. பின் மூன்று ஜதிக் கோர்வைகள், சாகித்யம் அதற்கான அபிநயம் என அமைக்கப்பட்டு ஆடப்பெறுகிறது.

**ஜதிகளும் உருப்படிகளும்**

லய நுட்பங்களும், கணிதக் கூறுகளும் கொண்ட ஜதிகளைத் தயாரிப்பதில் மீனாட்சிசுந்தரம்பிள்ளை திறமை வாய்ந்தவர். தன் மாணவியர்களில் திறமை வாய்ந்த மாணவிகளுக்காகவே கடினமான ஜதிகளை உருவாக்குவாராம். பந்தணைநல்லூர் ஜெயலஷ்மி ஆடுவதற்கென்றே பல ஜதிகளை உருவாக்கியுள்ளார். அதுபோல் கடினமான ஜதிகள் சுமார் எழுநூறு உண்டாக்கியதாக தெரியவருகிறது.

**மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றிய பின்வரும் உருப்படிகள் கிடைக்கப் பெற்றுள்ளன.**

பதவர்ணம்

இந்த கோபமேலரா - இராகம் - தோடி தாளம் - ஆதி

ஸரஸீடு நீவேயனி - இராகம் - வாஸஸ்பதி தாளம் - ஆதி

கீர்த்தனை

கருண ஸேயவே காத்யாயணி - இராகம் - தோடி தாளம் - ஆதி

கந்துகா நகரமுன - இராகம் - பேகடா தாளம் - ஆதி

இவரால் இயற்றப்பட்ட ஜதிகள் சில

ரூபக தாளம்

| | | |
|---|---|---|
| தாநுதநம்தரி, | தா::தத | நம்தரிகிடதக, |
| ததநுதநம்தரி, | தை::தத | நம்தரிகிடதக, |
| தாநுதநம்தரி, | தா:தததுத | நம்தரிதை:: |
| தாநுதநம்,தத | நுதநம்,தநம்,கி | நம்,தஜம்,தரும், |
| த,கிடதகதரிகிடதோம் | :கிடதகதரிகிடதோம் | :கிடதகதரிகிடதோம் |

ஆதி தாளம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தததத | னதஜனு | தாஹத | ஜம்,தக ஜம்,த | ஜம்:த | ரும்:க | தீம்,தக |
| தததத | னதஜனு | தாஹத | ஜம்,தக ஜம்,த | ஜம்:த | ரும்:க | தீம்,தக |
| தததத | னததா | தஜனுஜ | னுததா ததிமிதி | மிததா | திமிதகி | டததக |

ததனதா :தஜ னுதா: ததிமிதா :ததி தகதி, திக்கிடதக தரிகிடதோம்

ததனத னததா தஜனுஜ னுததா ததிமிதி மிததா திமிதகி டததக

ததனதா :தஜ னுதா: ததிமிதா ததி தகதி, திக்கிடதக தரிகிடதோம்

ததனத னததா தஜனுஜ னுததா ததிமிதி மிததா திமிதகி டததக

ததனதா :தஜ னுதா: ததிமிதா:ததி தகதி திக்கிடதக தரிகிடதோம்

**முடிவுரை**

நாட்டியக் கலை வளர்ச்சியில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்தவர் பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள். இவர் கலைக்காக ஆற்றிய பணிகள் ஏராளம் ஏராளம். பல்வேறு திறமைகளைக் கொண்டு ஒரு நாட்டிய ஆசான் எவ்வாறு இருக்கவேண்டுமோ அதற்கு ஏற்றாற்போல் இசை, நடனம், மொழி என அனைத்து கலைகளையும் கற்று சிறந்த நாட்டிய ஆசானாக வாழ்ந்த மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் 1955 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

**உசாத்துணை நூல்கள்**


1.ஞானாம்பிகைதேவி குலேந்திரன், தஞ்சை நால்வர்வழி நாட்டிய இசை மரபு, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்,2005

2.சுந்தரம்.பி.எம், மரபு தந்த மாணிக்கங்கள், டாக்டர் வே.ராகவன் நிகழ் கலைகள் மையம் சென்னை,2003

3.சுந்தரம்.பி.எம், மரபு வழி பரதப் பேராசான்கள், மெய்யப்பன் தமிழாய்வகம் சிதம்பரம்,2002

4.லீலாம்பிகை செல்வராஜா, நடன சாரம், யுனிஆட்ஸ் லிமிட்டட் கொழும்பு,2001

5.பத்மாசுப்ரமணியம், பரதகலைக்கோட்பாடு, வானதி பதிப்பகம் சென்னை

6.சிவானந்தம்.கே.பி, பொன்னையா மணிமாலை, ரத்தினசாமி செட்டியார் வெளியீடு, சென்னை


## Reference Books


1. Gnanambikaidevi Kulendran, Thanjai Naalvarvazhi Natya Isai Marapu, Tamil University Thanjavur, 2005
2. Sundaram.B.M, Marabhu thantha Manikkangal, Chennai, 2003
3. Leelambigai Selvarajah, Nadana chaream, Colombo, 2001
4. Sivanandham.K.P, Ponnaiya Manimalai, Chennai

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com